## அன்னை மொழியே

<u>1mark</u>

1. பெருஞ்சித்திரனாரின் எந்தப் படைப்பு தமிழுக்குக் கருவூலமாய் திகழ்கிறது? (திருக்குறள் மெய்ப்பொருளுரை)

2. 'அன்னை மொழியே' என்ற தலைப்பு எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது? (கனிச்சாறு)

3. "சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும்" என்று தமிழ் உணர்வை வெளிப்படுத்தியவர்? (க.சச்சிதானந்தன்)

4. யாருடைய நூல்களை அரசு நாட்டுடைமையாக்கப் பட்டுள்ளது? (பாவலரேறு பெருஞ்சித்திரனார்)

5. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் என்ன? (துரை. மாணிக்கம்)

6. 'தென்னவன்' என்று குறிப்பிடப்படும் மன்னன் யார்? (பாண்டிய மன்னன்)

7. பாண்டிய மன்னனின் மகளாக சொல்லப்படுவது? (தமிழ்மொழி)

8. தனக்கெனத் தனிச்சிறப்பும், இலக்கியவளமும் கொண்ட மொழி எது? (தமிழ்மொழி)

9. கனிச்சாறு தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட இருவேறு தலைப்பு யாது? (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்)

10. 'பாவலரேறு' என்ற பட்டம் பெற்றவர் யார்? (பெருஞ்சித்திரனார்)

Scanned by CamScanner

## 2 mark

### குறுவினா

1. அன்னை மொழியாக பாவலரேறு தமிழை சிறப்பிப்பதை எழுதுக?

அன்னை மொழியே! அழகாய் அமைந்த செழுந்தமிழே! பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே என்று பாவலரேறு தமிழ்மொழியை சிறப்பித்து கூறுகிறார்.

2. குமரிக் கண்டத்தில் அரசாண்ட மொழி எது?

கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மொழி தமிழ்மொழி.

3. தமிழ் மொழியை பாவலரேறு எவ்வாறு வாழ்த்துகிறார்?

பாண்டிய மன்னனின் மகனே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவனே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே என தமிழ்மொழியை வாழ்த்துகிறது.

4. எட்டுத்தொகை நூல்கள் யாவை?

* நற்றிணை * குறுந்தொகை * ஐங்குறுநூறு
* பதிற்றுப்பத்து * பரிபாடல் * கலித்தொகை
* அகநானூறு * புறநானூறு.

5. 'அன்னை மொழி' என்னும் பாடத்தில் குறிப்பிடப்படும் ஐம்பெரும் காப்பியங்கள் யாவை? * சிலப்பதிகாரம் * மணிமேகலை.

6. பெருஞ்சித்திரனார் தமிழுணர்வை உலகெங்கும் பரப்புவதற்கு பயன்படுத்திய இதழ்கள் யாவை?

* தென்மொழி * தமிழ்ச்சிட்டு.

Scanned by CamScanner

7. அன்னை மொழி என்னும் பாடத்தில் குறிப்பிடப்படும் சங்க இலக்கியங்களாவை யாவை?

* பத்துப்பாட்டு * எட்டுத்தொகை

<u>சிறுவினா</u>

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு கூறுவன யாவை?

அன்னை மொழியே! அழகாய் அமைந்த செழுந்தமிழே! பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகின்றோம்.

இரட்டுற மொழிதல்

-சந்தக்கவிமணி தமிழழகனார்

<u>1 mark</u>

1. இரட்டுற மொழிதலின் வேறுபெயர்? (சிலேடை அணி)

2. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வரும் அணி? (இரட்டுற மொழிதல் அணி)

3. 'சந்தக்கவிமணி' என்று அழைக்கப்படுவர் யார்? (தமிழழகனார்)

4. இலக்கண புலமையும் இளம்வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றல் பெற்றவர் யார்? (தமிழழகனார்)

www.kalvixpress.in

Scanned by CamScanner

5. 'தமிழழகனாரின்' இயற்பெயர் என்ன? (சண்முகசுந்தரம்)

6. 'ஆழிக்கு இணை' என்றப் பாடலின் தலைப்பு எதிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது? (தனிப்பாடல் திரட்டு)

## குறுவினா 2 mark

1. தமிழ் எதனால் வளர்ந்தது? எதனால் வளர்க்கப்பட்டது?

தமிழ்

தமிழ், இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது; முதல் இடை கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.

2. கடல் எவற்றை எல்லாம் தருகிறது?

கடல் முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது; வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது;

3. இரட்டுற மொழிதல் அணி என்றால் என்ன?

ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள் பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதனைச் சிலேடை அணி என்றும் அழைப்பர். செய்யுளிலும் உரைநடையிலும் மேடைப்பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

4. இரட்டுற மொழிதல் - நூல்குறிப்பு தருக.

புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பான தனிப்பாடல் திரட்டு (ஐந்தாம் பகுதி - கழகப்பதிப்பு) என்னும் நூலிலிருந்து இந்தப்பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது.

www.kalviexpress.in

Scanned by CamScanner

5. இரட்டுறமொழிதலான் ஆசிரியர் குறிப்பு தருக.

சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் சண்முகசுந்தரம். இலக்கணப் புலமையும் இளம்வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்ற இவர் பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

## சிறுவினா

1. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

| பாடல் அடிகள் | தமிழுக்கு | கடலுக்கு |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ். | முத்தினை அமிழ்ந்து எடுத்தல் |
| முச்சங்கம் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கம் | மூன்று வகையான சங்குகள் தருதல் |
| மெத்தவணிகலன் (மெத்த + அணிகலன்) | ஐம்பெரும் காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | * சங்கப் பலகையிலிருந்து * சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை | நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல். |

Scanned by CamScanner

## உரைநடை

### தமிழ்ச்சொல் வளம் - தேவநேயப் பாவாணர்

<u>1 mark</u>

1. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவியவர் யார்? (தேவநேயப்பாவாணர்)
2. உலகத் தமிழ்க் கழகத்தின் தலைவராக இருந்தவர் யார்? (தேவநேயப்பாவாணர்)
3. 'மொழிஞாயிறு' என்று யாரை அழைக்கின்றோம்? (தேவநேயப்பாவாணர்)
4. 'தமிழ்ச்சொல் வளம்' தலைப்பு எதிலிருந்து எடுக்கப்பட்டது? (சொல்லாய்வுக் கட்டுரைகள்)
5. மொழிக்காக உலக மாநாடு முதல் நடத்திய முதல் நாடு? (மலேசியா)
6. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் 'பாவாணர் நூலகம்' ஒன்றை உருவாக்கியவர்? (தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்)
7. விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று கூறியவர்? (இரா. இளங்குமரனார்)
8. 'பாவாணர் வரலாறு', 'தேவநேயம்' என்ற நூலை எழுதியவர்? (இரா. இளங்குமரனார்)
9. திராவிட மொழிகள் ஒப்பியல் இலக்கணத்தை எழுதியவர்? (கால்டுவெல்)
10. நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்றவர் யார்? (மகாகவி பாரதியார்)
11. மலேசியாவில் மொழிக்காக உலக மாநாடு நடத்தப்பட்ட மொழி எது? (தமிழ்மொழி)

Scanned by CamScanner

குறுவினாக்கள்

1. ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொற்களை எழுதுக?

* தாள் - நெல், கேழ்வரகு
* தண்டு - கீரை, வாழை
* கோல் - நெட்டி, மிளகாய்ச்செடி
* தூறு - குத்துச்செடி, புதர்.

2. காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக?

* சுள்ளி - காய்ந்த குச்சு (குச்சி)
* விறகு - காய்ந்த சிறுகிளை
* வெங்கழி - காய்ந்த கழி
* கட்டை - காய்ந்த கொம்பு கவையும் அடியும்.

3. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக?

* அரும்பு - பூவின் தோற்றநிலை
* போது - பூ விரியத் தொடங்கும் நிலை
* மலர் (அலர்) - பூவின் மலர்ந்த நிலை
* வீ - மரத்திலிருந்து பூ கீழே விழுந்த நிலை
* செம்மல் - பூ வாடின நிலை.

4. தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் ஏதேனும் ஐந்து சொற்களை எழுதுக?

* பூம்பிஞ்சு - பூவோடு கூடிய இளம்பிஞ்சு
* பிஞ்சு - இளம் காய்
* வடு - மாம்பிஞ்சு
* மூசு - பலாப்பிஞ்சு
* கவ்வை - எள்பிஞ்சு

Scanned by CamScanner

www.kalviexpress.in

* குரும்பை - தென்னை, பனை போன்றவற்றின் இளம் பிஞ்சு
* முட்டுக் குரும்பை - சிறு குரும்பை
* இளநீர் - முற்றாத தேங்காய்
* நுழாய் - இளம்பாக்கு
* கருக்கல் - இளநெல்
* கச்சல் - வாழைப்பிஞ்சு.

5. உலகில் மொழிக்காக மாநாடு நடத்தப்பட்ட இடமும், மொழியும் யாது?

உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அந்த மொழியும் தமிழே.

## சிறுவினாக்கள்

1. இளம் பயிர் வகைகள் ஐந்தினை தொடரில் அமைத்து எழுதுக.
* புளியங் கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.
* வாழை குருத்து அழகாக உள்ளது.
* நெல் நாற்று காற்றில் ஆடுகிறது.
* தென்னம் பிள்ளை தலை அசைக்கிறது.
* கத்தரி நாற்று வளர்ந்து நிற்கிறது.

2. தானியங்களுக்கு வழங்கும் சொற்களை வகைப்படுத்துக.
* கூலம் - நெல், புல் (கம்பு)
* பயறு - அவரை, உளுந்து
* கடலை - வேர்க்கடலை, கொண்டைக்கடலை
* விதை - கத்தரி, மிளகாய்
* காழ் - புளி, காஞ்சிரை (எட்டி மரம்)
* முத்து - வேம்பு, ஆமணக்கு.

Scanned by CamScanner

www.kalviexpress.in

3. இலைவகைகளை வகைப்படுத்தி எழுதுக?

இலை வகை

தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள்.

* இலை - புளி, வேம்பு
* தாள் - நெல், புல்
* தோகை - சோளம், கரும்பு
* ஓலை - தென்னை, பனை
* சண்டு - காய்ந்த தாளும் தோகையும்.
* சருகு - காய்ந்த இலை.

மொழி - எழுத்து சொல் (இலக்கணம்)

1. உயிரளபெடை என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?

* செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவுசெய்ய, நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இவ்வாறு வருவது உயிரளபெடை எனப்படும்.
* உயிரளபெடை மூன்று வகைப்படும்.

2. சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? யாவை?

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்துகள்.

3. செய்யுளிசை அளபெடையை சான்றுடன் விளக்குக.

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய. நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்போம். இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.

ஓஒதல் வேண்டும் - மொழி முதல்
உறாஅர்க்கு உறுநோய் - மொழியிடை
நல்ல படாஅ பறை - மொழியிறுதி.

www.kalviexpress.in
Scanned by CamScanner

www.kalviexpress.in

4. இன்னிசை அளபெடையை சான்றுடன் விளக்குக.

செய்யுளில் இசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. மற்றாங்கே

5. சொல்லிசை அளபெடையை சான்றுடன் விளக்குக.

செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.

உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.

6. நசை - விருப்பம்; விரும்பி என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது. பெயர்ச்சொல், வினை அடையாக மாறியது.

6. ஒற்றளபெடை என்றால் என்ன? சான்று தருக?

செய்யுளில் இசை குறையும் போது அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும், ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.

எ.கா

* எ ஃ ஃ கிலங்கிய கையராய் இன்னுயிர்
* வெ ஃ ஃ குவார்க்கில்லை வீடு.

7. சொல் என்றால் என்ன?

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும். அது.

8. மூவகை மொழிகள் யாவை?

தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மொழி மூன்று வகையாக அமையும்.

Scanned by CamScanner

www.kalviexpress.in

9. தனிமொழி என்றால் என்ன ? சான்று தருக.

ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் தருமாயின் அது தனிமொழி எனப்படும்.

எ.கா

கண், பழம் - பகாப்பதம்

கண்ணன், பழத்தான் - பகுபதம்.

10. தொடர்மொழி என்றால் என்ன ? சான்று தருக.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.

எ.கா

கண்ணன் வந்தான்.

மலர் வீட்டுக்குச் சென்றாள்.

11. பொதுமொழி என்றால் என்ன? சான்றுடன் தருக.

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொது மொழி எனப்படும்.

எ.கா.

எட்டு - எட்டு என்ற எண்ணைக் குறிக்கும்.

வேங்கை - வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும்.

## குறுவினா

1. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்து காட்டுக.

* வேங்கை - என்னும் பொதுமொழி விலங்கினையும், வேங்கை மரத்தையும் குறிக்கிறது.

Scanned by CamScanner

* வேம் + கை - என்னும் சொல் தொடர்மொழியாய் பிரிந்து நின்று வேகின்ற கை எனும் வேறுபொருள் தரும்.

2. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்" - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

செய்யுளில் ஓசை குறையாத இடத்தில் இனிய ஓசைக்காக அளபெடுப்பது 'இன்னிசை அளபெடை' ஆகும்.

எ.கா

* உடுப்பதூஉம்
* உண்பதூஉம்

} இன்னிசை அளபெடை

3. "மணியும் சிலம்பே! மணிமேகலைவடிவே! முன்றும் நினைவால் முழுதாடி வாழ்த்துவமே!" - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

* சீவகசிந்தாமணி
* வளையாபதி
* குண்டலகேசி.

Scanned by CamScanner

# பத்தாம் வகுப்பு

# தமிழ்

## Unit – I

நேரத்தை போக்குவதற்கு
ஆயிரம் வழிகள் உண்டு .....
ஆனால் போக்கிய நேரத்தை
பெறுவதற்கு ஒரு வழிகள்
கூட இல்லை .....

தமிழ் பேராசிரியர்.
மா. கருப்புசாமி
( M.A.,B.Ed.,M.Phil.,)

Scanned by CamScanner